அனைத்து அரசு அதிகாரிகளுக்கும், வருகை தந்துள்ள பொதுமக்கள் அனைவருக்கும் எனது முதற்கண் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். எனது பெயர் பழனிக்குமார். இந்த ஊராட்சியினுடைய துணைத் தலைவராக ஐந்தாண்டு காலம் பணியாற்றி உள்ளேன் என கூறினார். இந்த கல்குவாரிகளை நம்பி கிட்டத்தட்ட 5000 பணியாளர்கள் அங்கு பணிபுரிகிறார்கள். இந்த கல்குவாரியை நம்பி தான் இந்த மேலூர் கிராமம் வளர்ச்சி பெற்று உள்ளது. இந்த மண்டபம் கூட அந்த கல்குவாரி நிதியிலிருந்து கட்டப்பட்டது. நிறைய சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது.இந்த கிராமத்திற்கு நிறைய வாழ்வாதாரங்கள் மற்றும் நிறைய பலன்கள் கிடைத்துள்ளது. ஆகையினால் அரசு சட்ட திட்ட உதவியோடு இந்த கல்குவாரியை நடத்துவதற்கு எந்த ஆட்சபனையும் இல்லை என்று எனது சார்பாக தெரிவித்துக்கொள்கிறேன் என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

<u>2. திரு. பாண்டியன், மேலூர்</u>

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பொது மக்களின் கருத்து கேட்பு கூட்டத்திற்கு தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கும் வட்டாட்சியர், கோட்டாட்சியர் மற்றும் வருவாய்த்துறை அலுவலர்கள், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய அலுவலர்கள் அனைவரையும் மேலூர் கிராமத்தின் சார்பாக அன்போடு வரவேற்கிறேன். எனது பெயர் பாண்டியன், மேலூர். இந்த கல்குவாரி, 210 சர்வே நம்பரில் உள்ள இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என கூறினார். ஆனால், அனுமதி வழங்குவதில் சில கட்டுப்பாடுகள் இருக்கிறது. நீங்கள் இப்பொழுது கல்குவாரி ஏலம் விட்டுவிட்டு போய்விடுகிறீர்கள். சரியான முறையில் ஆய்வு செய்ய வேண்டும். அங்கு மக்களுக்கு பிரச்சனை வராதவாறு செய்ய வேண்டும். இப்பொழுது நீங்கள் கருத்து கேட்டுவிட்டு, அனுமதி கொடுத்து விட்டு செல்கிறீர்கள். அங்கு என்ன ரகமான வெடி போடுகிறார்கள் என்று கண்காணிப்பது இல்லை என தெரிவித்தார். இப்பொழுது பக்கத்து கல்குவாரியில் ஆழ்துளை வெடி எல்லாம் வைத்து நிறைய வீடுகள் பாதிக்கப்பட்டு உள்ளது. விவசாய நிலங்கள் எல்லாம் பாதிக்கப்பட்டுள்ளது. வெடியில் வருகிற அந்த மாசினால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது. அந்த காற்றினால்

9-

மக்களுக்கு நிறைய பிரச்சினைகள் எல்லாம் வந்துள்ளது என கூறினார். அதனால், கல்குவாரி நடத்துவதற்கு அனுமதி தாராளமாக வழங்கலாம். ஏன்னென்றால், அந்த கல்குவாரியை வைத்து தான் இந்த பஞ்சாயத்து நிர்வாகமே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இப்பொழுது இந்த பஞ்சாயத்துக்கு வருடத்திற்கு தமிழ்நாடு அரசாங்கம் 10 லட்சம், 15 லட்சம் தான் ஒதுக்குகிறது. ஆனால், இந்த கல்குவாரி நிதியினால் வருடத்திற்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் வருகிறது. சில கட்டுப்பாடுகளுடன் இந்த கல்குவாரிகளுக்கு அனுமதி கொடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். அந்த கல்குவாரியை சுற்றி கம்பி வேலிகளோ அல்லது சுற்றி மக்கள் வந்து பள்ளத்தில் போய் விழுந்திடாமல் அதில் எடுக்கப்படும் மணலை சுற்றி பாதுகாப்பு சுவர் மாதிரி அமைக்க வேண்டும் என கூறினார். இவற்றையெல்லாம் சில பாதுகாப்போடும், கட்டுப்பாடுகளோடும் அனுமதி வழங்குமாறு அன்போடு கேட்டுக்கொள்வதாக கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

3. திரு. ராஜ்குமார், மேலூர்

கருத்து கேட்பு கூட்டத்திற்கு வந்துள்ள அனைவருக்கும் பொதுமக்கள் மற்றும் அரசு அதிகாரிகளுக்கு எனது சிரம் தாழ்ந்த வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு, நான் மேலூர் கிராமத்தை சேர்ந்த ராஜ்குமார். இந்த கல்குவாரி நடத்துவதற்கு எங்களுக்கு எந்த ஆட்சேபனையும், பிரச்சனையும் இல்லை. ஆனால், குளத்திற்கு நீர்வரத்து வாரி எதுவும் இல்லை. அதை மீட்டுக் கொடுத்து விடுங்கள் என்றார். குளத்திற்கு நீர் வரத்து வரும் வாரி, எந்த வாரியும் இல்லை. அனைத்து வாரிகளும் இந்த குவாரிகளால் நிறுத்தப்பட்டுள்ளது என தெரிவித்தார். குளத்திற்கு சுத்தமாக நீர்வரத்து இல்லை. இதனால், மூன்று மாதத்திற்கு பயிருக்கு வர வேண்டிய தண்ணீர் இரண்டு மாதத்திலேயே இல்லாமல் போய்விடுகிறது. பாதி மக்கள் நடாமலேயே விட்டு விட்டார்கள். இதனால், கொஞ்சம் விவசாயம் பாதிக்கப்படுகிறது. கல்குவாரியால் பஞ்சாயத்திற்கு வருமானம் வந்தாலும் கூட பஞ்சாயத்தில் உள்ள மக்கள் எல்லாம் கொஞ்சம் அடிமட்டத்தில் தான் இருக்கிறார்கள் என்று கூறினார். விவசாயத்தை நம்பியுள்ள மக்கள் இதனால் பாதிக்கப்படுகிறார்கள். மற்றபடி வேலைக்கு போகிறார்கள் எல்லாம் அவர்கள் வேலையை பார்க்கிறார்கள். நீர்வரத்தையெல்லாம் பார்த்து சரி செய்து கொடுங்கள். அதை மட்டும் கேட்டுக்கொள்கிறேன் என கேட்டுக்கொண்டு தனது கருத்தினை பதிவு செய்தார்.

4. திரு. எம்.சி. மனோகரன், சமூக ஆர்வலர், மேலூர்

இன்றைய தினம் நடக்கின்ற தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பிலே நடைபெறுகின்ற கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை தந்துள்ள அரசு அலுவலர்களே

மற்றும் பொதுமக்களே உங்கள் அனைவருக்கும் மேலூர் எம்.சி.மனோகரன் சமூக ஆர்வலர் மற்றும் ஊராட்சி மன்றத்தில் ஐந்து முறை பணியாற்றி இருக்கின்ற வாய்ப்பும் கிடைத்திருக்கின்றது. நான் இந்த பகுதியில் மாவட்டம் முழுவதுமாக சென்று சமூக ஆர்வலராக பணிபுரிந்து கொண்டிருக்கின்றேன். அந்த வகையில் என்னுடைய கிராமத்தில் ஆறுமுகம் கல் உடைக்கும் கல்குவாரி நடத்த வாய்ப்பு கேட்டுள்ளார்கள். என்னுடைய மேலூர் ஊராட்சி மன்றத்தின் சார்பிலும் என்னுடைய சார்பிலும் அதற்கு நான் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. ஆனால் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு, வாரி வரத்துகள் எல்லாம் எடுக்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால், அது நீதிமன்றத்தில் உள்ள வழக்கு, பேச கூடாது. அதுபோல் வாரிகள் கண்டிப்பாக அங்கு மட்டுமல்ல அந்த கல்குவாரியில் மட்டுமல்ல வாரிகள் எங்கெங்கு இருக்கின்றதோ அதையெல்லாம் அகற்ற வேண்டும். அகற்றி பாசன கால்வாய் வரவேண்டும். பொதுமக்கள் பயன்படுகின்ற வகையிலே அந்த வாரிகள் அகற்றி மீட்டெடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் சொல்லப்போனால் என்னுடைய ஊராட்சி மன்றம் பல கோடி ரூபாய் கல்குவாரி நிதிகளை ஈட்டப்பட்டுள்ளது. இங்கு பல்வேறு சமூக கட்டிடங்கள் மற்றும் குளங்கள் சமுதாய கூடங்கள் அனைத்துமே இங்கு செய்யப்பட்டிருக்கின்றது. இதனால், எங்கள் மேலூர் ஊராட்சி மன்றம் வளர்ச்சி அடைந்திருக்கின்றது. நான் பல கோட்டாட்சியர்களை சந்தித்து இருக்கின்றேன். அவர்களும் இங்கு வந்து கருத்துக்கேட்பு கூட்டம் நடத்தி இருக்கின்றார்கள். எங்களுடைய ஊராட்சியை பொருத்தவரை கனிமம் கண்டிப்பாக வேண்டும். கனிமம் இல்லையென்றால் எந்த ஒரு வளர்ச்சி பணியும் செய்ய முடியாது. ஏன்? இந்த கட்டிடத்தை கூட கட்ட முடியாது. இதற்கு மணல், கல் தேவை. அப்படி இருக்கின்ற வகையில், நாங்கள் எங்களுடைய கிராமத்திற்கு வளர்ச்சி அடைகின்ற வகையிலே ஆறுமுகம் கல் உடைக்கும் குவாரிக்கு அனுமதி தரலாம். அதற்கு எந்தவிதமான ஆட்சேப்பனையும் தெரிவிக்க மாட்டோம் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். நன்றி வணக்கம். எனது பெயர் எம்.சி.மனோகரன், சமூக ஆர்வலர், ஐந்து முறை இந்த ஊராட்சியில் வார்டு உறுப்பினராக பணியாற்றி கொண்டிருக்கிறேன். இன்னும் பணியாற்ற காத்துக் கொண்டிருக்கிறேன் என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**<u>5. திரு. சண்முகராஜா, வடசேரிப்பட்டி</u>**

என் பெயர் சண்முகராஜா, வடசேரிப்பட்டி. நான் கிட்டத்தட்ட 25 ஆண்டுகளாக ஓட்டுநராக இருக்கிறேன். இந்த கல்குவாரி இல்லை என்றால் கிட்டத்தட்ட 75 குடும்பங்கள் பாதிக்கப்படும். நாங்கள் எல்லாருமே இந்த கல்குவாரியை நம்பி தான் வண்டி ஓட்டுவதில் இருந்து, எங்களுடைய குடும்பங்கள், இங்கு இருக்கின்ற அத்தனை தொழிலாளர்களும் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் இதற்கு அனுமதி

கொடுக்குமாறு உங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன் எனக் கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**6. திரு.கி.பாலசுப்பிரமணியன், கீழமுத்துடையான்பட்டி**

வணக்கம், கீழமுத்துடையான்பட்டி கி. பாலசுப்ரமணியன். ஐயா வந்திருக்கக்கூடிய அனைவருக்கும், ஊர் மக்களுக்கும், உயர் அதிகாரிகளுக்கும் நன்றி. இந்த கல்குவாரியால் நிறைய குடும்பங்கள் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். நிறைய பள்ளிக்கூடங்கள் இதனால் மேம்பட்டுக் கொண்டிருக்கிறது. அதேபோல், கோயில்களும் இந்த கல்குவாரியால் நிறைய மேலும் வளர்ந்து கொண்டிருக்கிறது. இந்த கல்குவாரியை நம்பி கிட்டத்தட்ட ஒரு நூறு குடும்பங்கள் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். அவருடைய பிள்ளைகள் எல்லோரும் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பள்ளி கட்டணம் கூட கட்ட முடியவில்லை. இந்த கல் கல்குவாரி நிலைமையினால் பள்ளி கட்டணம் கூட கட்ட முடியவில்லை. இந்த 100 குடும்பங்களையும் இந்த கல்குவாரியை நம்பி இருப்பதினால் இவர்களுடைய நிலை மிகவும் பாதிக்கப்படுகிறது. அதே நேரத்தில் மாசு கட்டுப்பாடு வாரியத்தினால் அல்லது எவற்றினாலேயோ பாதிக்கப்படுகிற மாதிரி யாருக்கும் எதுவும் இல்லை. அரசு அலுவலரிடம் தாழ்மையோடும், கனிவோடும், பணிவோடும் கேட்பதாக கூறினார். இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்குமாறு அன்போடு கேட்டு விடைபெறுகிறேன் நன்றி வணக்கம் என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**7. திரு. சின்ராஜ், மேலூர்**

என் பெயர் சின்ராஜ். நான் ஜேசிபி இயக்குபவர். கிரஷர் போராட்டத்தினால் கொஞ்சம் பிரச்சனையாக உள்ளது. ஒவ்வொரு கிரசரையும் தடுத்து போராட்டம் செய்து நிறுத்தி விடுகிறார்கள். அதனால் என்னை போன்ற ஓட்டுநர், என்னை போன்ற கூலியாட்கள் என எனக்கு தொழில் கற்றுக் கொடுத்த ஒவ்வொருவரும் பாதிக்கப்படுகிறார்கள். எனக்கு வண்டி ஓட்ட கற்றுக் கொடுத்து போய்விட்டார்கள். எனக்கு மற்ற வேலை தெரியாது. இந்த கிரசரை நம்பி வந்துட்டேன். இந்த ஓட்டுநர் வேலையை நம்பி வந்துவிட்டேன். இதை நம்பி வந்ததினால் மற்ற வேலைக்கு போக முடியவில்லை. இருந்தாலும், இந்த கிரசரை நம்பி தான் இருக்கிறோம். இந்த கிரஷரை போராட்டம் செய்தால் மற்ற குடும்பத்திலிருந்து உழைப்பவர்கள், என்னை போன்று உழைப்பவர்கள் அதை நம்பித்தான் இருக்கின்றோம். அதனால், இந்த கிரசரை தடுப்பதற்கு எந்த ஒரு ஆட்சேபனையும் இல்லை. அதுவும் நீங்கள் சொல்வதை போன்று மாசு கட்டுப்பாடு இருப்பதாக சொல்கிறீர்கள். மாசு கட்டுப்பாடு இருந்தாலும் எல்லாவற்றிலும் முள்வேலி வைத்து அடைத்திருக்கிறார்கள். இந்த குவாரி நடத்தக்

கோரி அனைத்து ஓட்டுநர் மற்றும் இயக்குநரும் இணைந்து நாங்கள் சேர்ந்து உறுதிமொழி எடுத்துக்கொள்கிறோம் நன்றி வணக்கம் என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**8. திரு. பார்த்தசாரதி, மேலூர்.**

வணக்கம் ஐயா, எனது பெயர் பார்த்தசாரதி. நான் மேலூர். இந்த குவாரி நடத்துவதால் எங்களுக்கு எந்த விதமான பாதிப்பும் இல்லை. ஆனால், இந்த ஆழ்துளை வெடி போன்று பல வெடிகள் உபயோகபடுத்துவதால் எங்கள் தெருவில் வீடுகள் எல்லாம் கொஞ்சம் அதிர்கிறது. அந்த வீடுகள் எல்லாம் கொஞ்சம் அதிராமல் பாதுகாப்பான முறையில் வெடி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். இந்த குளத்துக்கரை வாரி எல்லாம் அடைத்திருக்கிறது. அதையும் கொஞ்சம் சரி செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறோம் என கூறி தனது கருத்தினை பதிவு செய்தார்.

**9. திரு. பி ஆனந்தபாபு, சத்தியமங்கலம்**

எனது பெயர் பி ஆனந்த் பாபு, ஊர் சத்தியமங்கலம். நான் 20 ஆண்டுகாலமாக இந்த கிரஷரில் ஓட்டுநராக இருக்கிறேன். எங்களுக்கு எந்த விதமான குறையும் இல்லை. நல்லபடியாக நடத்தி வருகிறார்கள். இந்த கல்குவாரி எங்களுக்கு இயங்கினால் கொஞ்ச நாளைக்கு எங்களுக்கு வேலை இருந்திருக்கும். இப்பொழுது வேலை இல்லை. தயவுசெய்து உயர் அதிகாரிகள் அனைவரும் எங்களுக்கு வேலை தருமாறு கல்குவாரி கிரஷர் இயங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் என கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**10. திரு. மணிகண்டன், காமராஜபுரம்**

வணக்கம் என்னுடைய பெயர் மணிகண்டன் நான் காமராஜபுரம் புதுக்கோட்டையிலிருந்து வருகிறேன். இந்த புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், மேலூர் கிராமத்தில் புல எண் 210/12C1A, 12C1B, 8A1A, 12B, 20 & 9C2. இதில் 2.13.0 ஹெக்டர் பரப்பளவில் ஆறுமுகம் கல்குவாரிக்காக இந்த கருத்து கேட்பு கூட்டத்தில் என்னுடைய கருத்துக்களை தெரிவிப்பதற்காக நான் வந்திருக்கிறேன். இதில் இவர்கள் இணையதளத்தில் ஏற்றி வைத்த சுற்றுச்சூழல் தாக்கம் மதிப்பீட்டு ஆவணங்களை படித்து பார்த்த வகையில், எனக்கு தெரிந்த கருத்துகளை நான் முன் வைக்கிறேன். இதில் ஓடை மற்றும் கால்வாய், இந்த நீர் நிலைகள் இருந்தால் 50 மீட்டர் இடைவெளி வேண்டும் என்பது சிறு கனிம விதிகள் 1959 சட்டம் சொல்கிறது. இந்த கல்குவாரியை ஒட்டி மேற்கு புறத்தில் புல எண் 7B-ல் ஒரு ஓடை செல்கிறது. இந்த ஓடைக்கு சிறு கனிம சலுகை 1959ன் சட்ட படி 50 மீட்டர் இடைவெளி விட

வேண்டும். ஆனால், ஐந்து மீட்டர் கூட இடைவெளி இல்லாமல் இருக்கிறது. இதில் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆங்கில விரிவான அறிக்கையை பார்த்தீர்கள் என்றால், இந்த சுரங்க திட்டத்துல பக்கம் 222-ல் வரைவு சுரங்கத் திட்டம் சமர்ப்பிக்க அறிவுறுத்தல் தொடர்பாக என்ற தலைப்பில் ஓடைக்கு அதாவது அந்த வாரிக்கு 10 மீட்டர் மட்டும் இடைவெளி வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுவே முதலில் தவறு. 50 மீட்டர் இடைவெளி விட வேண்டும் என்பதுதான் விதி படியும், சட்டப்படியும் சரியானது. ஆனால், அவர்கள் வந்து 222 ஆவது பக்கத்துல 10 மீட்டர் இடைவெளி விட வேண்டும் என்று கூறி இருக்கிறார்கள். அது இந்த ஆவணத்திலே தவறாக குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதை சுட்டி காட்டுகிறேன். சென்னை உதவி ஆணையர், நில நிர்வாகம் அவர்கள் தனியார் பட்டா நிலத்தில் இருந்தாலும் நிலவியல் பாதை, ஓடை, பூஸ்தி பாதை இவையெல்லாம் வருவாய் துறை நிலை ஆணை எண் 26-ல் பிரிவு 15 அதைப் பற்றிய அரசு ஆணையில் ஓடை மற்றும் பாதை அரசின் சொத்து என்று தெளிவாக தெரிவித்திருக்கிறார்கள். தனியார் பட்டா நிலத்தில் இருந்தாலும் இந்த ஓடை, பாதையெல்லாம் அரசின் சொத்து என்று தெரிவித்திருக்கிறார்கள். இந்த ஓடை தனியார் பட்டா நிலத்தில் இருந்தாலும், சட்டப்படி அரசின் சொத்து என்று கவனத்திற்கு கொண்டுவருகின்றேன். இந்த கல்குவாரியில் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை. அதனால், இந்த கல்குவாரிக்கு அனுமதி தரும்பொழுது இதை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். அரசு ஆழ்குழாய் கிணறு, நீரேற்று நிலையம், போர்வெல் மற்றும் மேல்நிலை நீர் தேக்க தொட்டி, நீர் வழங்கும் ஏற்பாடு இது எல்லாம் ஏதாவது இருந்தால் 500 மீட்டர் இடைவெளி விட வேண்டும் என்று சிறு கனிம சலுகை விதிகள் 1959 சட்டம் சொல்கிறது. கல்குவாரி அமையும் புலத்தின் சுற்றுப்புறத்தில் 500 மீட்டர் சுற்றளவில் அரசின் ஆழ்குழாய் கிணறு மற்றும் 500 மீட்டர் சுற்றளவில் மேல்நிலை நீர் தேக்க தொட்டி இதெல்லாம் இருக்கிறது. கல்குவாரி புலத்திற்கு 500 மீட்டர் சுற்றளவிற்குள் ஆழ்துளை கிணறு, நீரேற்று நிலையம், போர்வெல் மற்றும் 500 மீட்டர் சுற்றளவிற்குள் மேல்நிலை நீர் தேக்க தொட்டி நீர் வழங்கும் ஏற்பாடு இருக்கிற காரணத்தால், இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்குவதற்கு முன்பு, இதனை கவனத்தில் எடுத்துக் கொண்டு நீங்கள் அனுமதி கொடுக்கக் கூடாது. மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, அரசு ஆழ்துளை கிணறு இதெல்லாம் கல்குவாரி புலத்திலிருந்து சிறு கனிம விதிகள் 1959 சட்டம் பிரிவு 36-1ன் சட்டப்படி 500 மீட்டர் இடைவெளி விட வேண்டும் என்பதை நான் தெளிவாக மீண்டும் சொல்லிக்கொள்கிறேன். ஏற்கனவே, இயங்கிய கல்குவாரிக்கு 10 மீட்டர் இடைவெளி இல்லாமல் இருக்கிறது. இதில் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அனுமதி கேட்கின்ற கல்குவாரிக்கு 10 மீட்டர் இடைவெளி விட வேண்டும் என்பது சிறு கனிம

சலுகை விதிகள் 1959 சட்டம் தெளிவாக சொல்கிறது. இந்த கல்குவாரியில் கற்களை வெளியில் எடுத்து செல்வதற்கு கல்குவாரி உரிமையாளர்கள் அவர்கள் சொந்த செலவில் பாதை அமைத்துக் கொள்ள வேண்டும். அதுதான் விதி. ஆனால், புல எண் 210, 210/20, 9C2, 12C1, 12C2 இதில் கிழக்கு பகுதியில் இருக்கிற வெளிமுனை பகுதிக்கு, அதை ஒட்டிய கல்குவாரி 10 மீட்டர் இடைவெளி இல்லாமல் இருக்கிறது. கிழக்கு பகுதியில் இருக்கிற வெளிமுனைப் பகுதியில், ஒட்டிய பகுதியில் உள்ள கல்குவாரிக்கு 10 மீட்டர் இடைவெளி இல்லை. கல்குவாரிக்கு கிழக்கு புறத்தில் உள்ள கல்குவாரி நிலத்திலிருந்து பத்து மீட்டர் இடைவெளி விட்டு தான் கல்குவாரி இயங்க வேண்டும் என்று விதி சொல்கிறது. ஆனால், அவர்கள் அப்படி விடவில்லை. அங்கீகரிக்கப்பட்ட மனை, வீடுகள் அதைப்பற்றி விஷயங்கள் என்ன இருக்கிறது என்றால், சிறு கனிம சலுகைகள் 1959 பிரிவு 36 1-ல் வருவாய் துறை ஆவணங்களில் சுட்டியாக காட்டப்பட்டுள்ள, அதில் குறிப்பிட்டு இருந்தாலே போதும். அங்கீகரிக்கப்பட்ட வீடுகள், ஊராட்சி மற்றும் டிடிசிபி-யால் அங்கீகரிக்கப்பட்ட வீட்டு மனைகள், ஊர் நத்தம், கோவில், நிரந்தர கட்டுமானங்கள், அரசின் தொகுப்பு வீடுகள், பசுமை வீடுகள், வங்கி கடன் பெற்று கட்டப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வீடுகள் இவையெல்லாம் இருந்தால் 300 மீட்டர் இடைவெளி விட்டு தான் கல்குவாரி இயங்க வேண்டும் என்று விதி இருக்கிறது. அந்த விதியில் தெளிவாக சொல்லி இருக்கிறார்கள். இதில் பல அதிகாரிகள் தவறாக, வருவாய்த்துறை ஆவணங்களில் சுட்டியாக காட்டப்பட்டுள்ள, குறிப்பிட்டு இருக்கின்ற வீட்டில் குடியிருக்கவில்லை, வீடு இடிந்து விட்டது, சேதம் அடைந்து விட்டது என்று தவறாக அறிக்கை கொடுக்கிறார்கள். அதை மறைக்கிறார்கள். மறைத்துவிட்டு அனுமதி கொடுத்து விடுகிறார்கள். அது தவறு. சிறு கனிம சலுகை விதிகள் 1959 சட்டப்படி UDR வருவாய் துறை ஆவணங்களில் வீடு என்றும், வீட்டு மனை இடம் என்றும் குறிப்பிட்டு இருந்தாலே 300 மீட்டர் தள்ளி தான் கல்குவாரி இயங்க வேண்டும் என்பது சட்ட விதி. ஆனால், இவர்கள் அப்படியெல்லாம் செய்யவில்லை. எனவே, இந்த கல்குவாரிக்கு மிக அருகில் நிறைய வீடுகள் இருக்கிறது என்பதை சுட்டிக்காட்டுகிறேன். இந்த கல்குவாரி அமையும் புலத்தை சுற்றி 300 மீட்டருக்குள் நிரந்தர வீடு, தற்காலிக வீடுகள் நிறைய இருக்கிறது. அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர, தற்காலிக வீடுகள் வெடி வைக்கும் கல்குவாரியிலிருந்து 300 மீட்டர் சுற்றளவில் இருக்கக் கூடாது என்று நிறைய விதிகள் சொல்கிறது. ஆனால், இவர்கள் விதிக்கு புறம்பாக செய்ததனால் ஏற்கனவே இதே மாதிரி விதிக்கு முரணாக அனுமதி கல்குவாரிக்கு கொடுத்ததினால், கடந்த மே மாதம் 1ஆம் தேதி 2024 ஆம் வருடம் விருதுநகர் மாவட்டம், ஆவியூர் கிராமத்தில் ஒரு வெடி சம்பவம் நடந்து பல வீடுகள் இடிந்து உயிர் பலிகள் ஏற்பட்டது. அது மாதிரியான நிலமை

ஏற்படக்கூடாது என்பதற்காக தான் இந்த விதிகள் எல்லாம் இயற்றப்பட்டிருக்கிறது. Google வரைபடத்தில் சரிபார்த்த பொழுது, தென் கிழக்கில் பார்த்தீர்கள் என்றால் 146 மீட்டர் தூரத்தில் ஒரு வீடு, 223 மீட்டர் தூரத்தில் ஒரு வீடு, கிழக்கு பகுதியில் பார்த்தீர்கள் என்றால் 274 மீட்டரிலும் 13 மீட்டரிலும் இரண்டு வீடுகள் இருக்கிறது. வடகிழக்கு பகுதியில் 187 மீட்டரில் ஒரு வீடு இருக்கிறது. தென் கிழக்கு பகுதியில் 152 மீட்டரில் ஒரு வீடு இருக்கிறது. தெற்கு பகுதியில் பார்த்தீர்கள் என்றால் 128 மீட்டரில் ஒரு வீடு, 156 மீட்டரில் ஒரு வீடு என்று பல வீடுகள் 300 மீட்டருக்குள் இருக்கிறது என்பதை இவர்கள் மறைத்து இருக்கிறார்கள். எனவே, Lack of document, உண்மையை மறைத்து இருக்கிறார்கள். அடுத்து, நீர் தேக்கி வைக்கும் இடங்களான கண்மாய், ஏந்தல், ஏரி, ஊரணி, குளம் இவற்றிற்கு 500 மீட்டர் இடைவெளி விட்டு தான் கல்குவாரி இயங்கவேண்டும் என்று பல நீதிமன்றங்கள் தீர்ப்பு இருக்கிறது. விதிகளுக்கு புறம்பாக செயல்படக்கூடாது. ஏனென்றால் தண்ணீர் கீழ் நோக்கி தான் ஓடும். இங்கே இந்தப் பகுதியில் பார்த்தீர்கள் என்றால் இவர்கள் அறிக்கையில் சொல்லி இருக்கிறது, இந்த குவாரிக்கு 200 மீட்டர் தூரத்தில் வடக்கு புறத்தில் இரண்டு கண்மாய் இருக்கிறது. ஏற்கனவே, கல்குவாரியை சுற்றி 200 மீட்டர் சுற்றளவில் இரண்டு மிகப்பெரிய கண்மாய்கள் இருக்கிறதால் சட்டப்படி இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்க கூடாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். உயர்மின் கோபுரம் மற்றும் அதன் மின்சார தடத்திற்கு 650 வோல்ட் மின்சார தடத்திற்கும், காற்றாலை உள்ளிட்ட மின்சார உற்பத்தி செய்யும் இடத்திற்கும் கல்குவாரி அமையும் புலத்தின் வெளிமுனை பகுதிக்கும் 300 மீட்டர் இடைவெளி, அதாவது ஆயிரம் அடி இடைவெளி இருக்கவேண்டும் என்று இந்திய மின்சார சட்டம் 1956 பிரிவு 83-ல் 2 தெளிவாக கூறுகிறது. ஆனால், இந்த தாழ்வழுத்த மின்சார தடத்திற்கும் கல்குவாரி அமையும் புலத்தின் வெளிமுனை பகுதிக்கும் 50 மீட்டர் இடைவெளி வேண்டும் என்று சிறு கனிம சலுகை விதிகள் சொல்கிறது. தாழ்வான மின்சார தடத்திற்கு 50 மீட்டர் இடைவெளி விட வேண்டும் என்ற சிறு கனிம சலுகை விதிகள் சொல்வதற்கும் இந்த 650 உயர் அழுத்த மின்சார தடத்திற்கும் கல்குவாரி அமையும் புலத்தின் வெளிமுனை பகுதிக்கும் 300 மீட்டர் இடைவெளி இருக்கவேண்டும் என்று இந்திய மின்சார சட்டம் 1956 பிரிவு 83-2ல் சொல்கிறது. இரண்டுக்கும் முரண் இருக்கிறது. அதனால், இரண்டையும் கணக்கில் எடுத்து எது சரியானதோ அதை செய்யவேண்டும். ஆனால், இங்கு என்ன நடக்கிறது என்றால் மிக அருகில் நிறைய இருக்கிறது. இதில் பொய்யான தூர அளவீடு. இந்த கல்குவாரியை காட்டிய கிராம வரைபடத்தில் பொய்யான தூர அளவீட்டை குறிப்பிட்டு இருக்கிறார்கள். சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் இணைக்கப்பட்டு உள்ள இந்த கல்குவாரிக்கான அளவு

கிராம வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள கல்குவாரியின் வெளிமுனைப் பகுதியில் இருந்து 300 மீட்டர் சுற்றளவிற்கான தூர அளவீடுகள் சிறு கனிம விதிகள் 1959 சட்டப்படி இல்லை. ஏனென்றால், நடுவில் இருந்தே கணக்கு எடுக்கிறார்கள், வெளிமுனைப் பகுதியில் இருந்துதான் கணக்கு எடுக்க வேண்டும். நடுவில் இருந்து எடுக்கக் கூடாது என்பதுதான் விதி. விதிக்கு முரணாக நடுவில் இருந்து எடுக்கிறார்கள். கல்குவாரியின் மையப்பகுதியில் இருந்து எடுக்கக் கூடாது என்பதை தெளிவாக சொல்கிறேன். மோசடியாக இந்த அளவீடு செய்யப்பட்டு பொய்யான தகவல் அடிப்படையில் இந்த அறிக்கையை தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த அறிக்கையை முற்றிலுமாக புறம் தள்ளிவிட்டு, புதிய அறிக்கையை சரியான தரவுகளோடு சமர்ப்பிக்க சொல்ல வேண்டும். அரசு ஆழ்குழாய் கிணறு, நீரேற்று நிலையம் எல்லாம் அந்த கல்குவாரியை சுற்றி 500 மீட்டரில் இருக்கிறது என்பதை ஏற்கனவே சுட்டி காட்டி இருக்கிறேன். கல்குவாரி புலத்திற்கு 500 மீட்டர் சுற்றளவிற்குள் அம்மாபட்டி என்ற ஊர் இருக்கிறது. அங்கு அரசு ஆழ்குழாய் கிணறு, நீரேற்று நிலையம், போர்வெல். 500 மீட்டர் சுற்றளவில் மேல்நிலை நீர் தேக்க தொட்டி, நீர் வழங்கும் ஏற்பாடு எல்லாம் இருக்கிறது. கல்குவாரி புலத்திற்கு 500 மீட்டர் சுற்றளவிற்குள் கல்குவாரி புலத்தின் வெளிமுனைப் பகுதியில் இருந்து 100 மீட்டர் தூரத்திலேயே தென் கிழக்கு புல எண் 497-ல் தெற்கு புல எண் 493-ல், வடக்கு புல எண் 594-ல், வடமேற்கு புல எண் 431-ல் எல்லாம் கண்மாய் இருக்கிறது. இதெல்லாம் அரசு ஆழ்குழாய் கிணறு, நீரேற்று நிலையம், போர்வெல், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இவையெல்லாம் இங்கு இருக்கிறது. நீர் வழங்கும் ஏற்பாடு எல்லாம் இருக்கிறது. இதற்கு சட்டப்படி அனுமதி கொடுக்க முடியாது என்பதுதான் என்னுடைய கருத்து. இதுவரையிலும் நாம் பார்த்த வகையில் மேல்நிலை நீர் தேக்க தொட்டி, நீர் வழங்கும் ஏற்பாடு, அரசு ஆழ்குழாய் கிணறு, நீரேற்று நிலையம், போர்வெல் இவையெல்லாம் கல்குவாரி புலத்திற்கு சிறு கனிம சலுகை விதி 1959 சட்டம் பிரிவு 36ல்1ன் 500 மீட்டர் இடைவெளி விட வேண்டும். ஆனால், இந்த சுரங்க திட்டத்தில் இவையெல்லம் இருப்பதை காண்பிக்காமல் தயாரித்திருக்கிறார்கள். இதையெல்லாம் காட்டவே இல்லை. நான் குறிப்பிட்ட கண்மாய்கள் எல்லாம் இந்த சுரங்கத் திட்டத்தில் காண்பிக்கவே இல்லை என்பதை சுட்டி காண்பித்துக் கொள்கிறேன். அடுத்து அரசு நிலத்தை ஆக்கிரமித்து பாதை ஏற்படுத்தியிருக்கிறார்கள். வண்டி பாதை, மற்றும் நடைபாதை இருந்தால் 10 மீட்டர் இடைவெளி விட வேண்டும் என்பது சிறு கனிம சலுகை விதிகள் 1959 சட்டம் சொல்கிறது. சென்னை உதவி ஆணையர், நில நிர்வாகம் அவர்கள் தனியார் பட்டா நிலத்தில் இருந்தாலும் அரசு சொத்துதான் என்பதை நான் ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். எனவே, வண்டிப் பாதை தனியார் பட்டா நிலத்தில் இருந்தாலும்,

சட்டப்படி அது அரசு சொத்து என்று தான் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த கல்குவாரிக்கு கற்களை வெளியே எடுத்துச் செல்வதற்கும், உள்ளே வண்டி வருவதற்கும், கல்குவாரி உரிமையாளர்கள் தங்களுடைய சொந்த செலவில் தான் பாதை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பது விதி. அந்த விதிக்கு உட்பட்டு சொந்த செலவில் பாதை அமைத்துக் கொள்ள வேண்டும். ஆனால், இவர்கள் சொந்தமாக வண்டி பாதை, தடம் எதுவுமே அமைக்காமல் கல்குவாரிக்கு கிழக்கு புறம் இருக்கின்ற அரசு புறம்போக்கு நிலத்தில் புல எண் 542-ஐ ஆக்கிரமித்து பாதை அமைத்து, கற்களை கொண்டு செல்கிறார்கள். இவற்றை சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில கற்களை கொண்டு செல்லும் பாதையாக காட்டி இருக்கிறார்கள். இது அரசு புறம்போக்கு நிலத்தில் அமைக்கப்பட்டுள்ளது என்பதை சுட்டிக்காட்டுகிறேன். கல்குவாரி அனுமதிக்கு கேட்டதற்கான விண்ணப்பத்தில் அதனுடைய குறிப்பாணையில் கல்குவாரிக்கு கிழக்குபுறத்தில் அரசு புறம்போக்கு நிலத்தில் இருந்து 10 மீட்டர் - 35 அடி இடைவெளி விட்டு தான் கல்குவாரி இயங்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், அப்படி இல்லாமல் அரசு புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு இருக்கிறது. எனவே, அரசு நிலத்தை ஆக்கிரமித்து, அதை பாதையாக மாற்றப்பட்டு சட்டவிரோதமாக பயன்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அரசின் மதிப்பில் உள்ள பொது சொத்து சேதாரம் ஆகி இருக்கிறது என்பதையும் குறிப்பிட்டு சொல்லிக்கொள்கிறேன். இந்த கல்குவாரிக்கு கனிமங்களை எடுத்து செல்வதற்கு பாதை இல்லாமல் அரசு இந்த கல்குவாரி இயங்க அனுமதி தரக்கூடாது என்பதை இங்கு வெளிப்படையாக சொல்லிக் கொள்கிறேன். அங்கீகரிக்கப்பட்ட வீடுகள், வீட்டு மனைகள், நிரந்தர கட்டுமானங்கள் ஏற்கனவே எட்டு வீடுகள் இருப்பதாக நான் சொல்லி இருக்கிறேன். அதையும் நான் கவனத்தில் கொண்டு வருகிறேன். இந்த புலத்தை சுற்றி 300 மீட்டரில் பல நிரந்தர தற்காலிக வீடுகள் இருக்கிறது என்பதை மீண்டும் நினைவுபடுத்துகிறேன். நீர் தேக்கி வைக்கும் கண்மாய்கள் தென் கிழக்கு புல எண் 497-ல் மேலப்பரளி கண்மாய் இருக்கிறது. தெற்கு புல எண் 493-ல் அம்மாபட்டி புதுகண்மாய் இருக்கிறது. வடகிழக்கு புல எண் 544-ல் கோதை கண்மாய் இருக்கிறது. வடமேற்கு புல எண் 431-ல் கண்மாய் இருக்கிறது. எனவே இதெல்லாம் கல்குவாரியின் வெளிமுனைப் பகுதியில் இருந்து 100 மீட்டர் தூரத்திற்குள் இதெல்லாம் இருக்கிறது. நான்கு பெரிய கண்மாய் 100 மீட்டர் தூரத்திலேயே இருக்கிறது என்பதை தெளிவாக சுட்டிக்காட்டுகிறேன். இதனால் இது அனுமதி கொடுப்பதற்கு கவனத்தில் எடுத்து இது அனுமதி அளிக்க தகுதியற்றது என்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன். அடுத்தது தாழ்வழுத்த மின்சார தடம் இதன் பக்கத்திலேயே இருக்கிறது என்பதை சுட்டிக்காட்டி இருக்கிறேன்.

அதையும் நீங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். இவற்றையெல்லாம் இவர்கள் குறிப்பிடவில்லை. அடுத்து பார்த்தீர்கள் என்றால் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தினுடைய TOR மே 2025-ல் தான் நீர், காற்று, மண் மற்றும் ஒலி அனைத்து ஆய்வுகளையும் செய்வதற்கு அனுமதி கொடுத்திருக்கிறது. ஆனால், அனுமதி கொடுப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே 01.03.2025 இருந்து 31.05.2025 வரை அடிப்படை கண்காணிப்பு காலம் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆனால், இது சட்டப்படி தவறானது. SEIAA ஆணை வழங்குவதற்கு முன்பே ஆய்வு செய்வதாக சொல்லி இருக்கிறார்கள். மூன்று மாதம் தொடர்ந்து ஒரே இடத்தில் ஒவ்வொரு முறை ஆறு இடங்களில் திரும்பத் திரும்ப வந்து ஆய்வு செய்து இருக்கிறார்கள். காற்று ஆய்வு செய்ததாக சொல்கிறார்கள். அந்த இடத்தில் அட்சரேகை, தீர்க்கரேகை மட்டும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அந்த இடத்தில் எந்த இடத்திலேயும் மின்சாரம் எடுக்காமல் அந்த ஆய்வு செய்ய முடியாது. காற்று ஆய்வு என்பது பெரிய கருவிகளை வைத்து தான் ஆய்வு செய்ய வேண்டும். அதற்கு மின்சாரம் வேண்டும். அப்பொழுது மின்சாரம் எங்கிருந்து எடுத்தார்கள், எவ்வளவு மின்சாரம் பயன்பட்டது என்பதை நீங்கள் அறிக்கையாக கேட்டு வாங்கி அது தவறு என்று அவர்கள் கூறி இருக்கின்ற, இந்த அறிக்கையில் சொல்லி இருக்கக் கூடிய இந்த காற்று, மண், ஒலி ஆய்வு தவறு. பொய்யாக சொல்லி இருக்கிறார்கள் என்பதை வெளிப்படையாக நம்மால் தெரிந்துக்கொள்ள முடியும். அதனால், இது ஏமாற்றம், பித்தலாட்டம். பித்தலாட்டம் செய்து ஆய்வு தயார் செய்து இருக்கிறார்கள் என்பதை நான் குற்றசாட்டாக வைக்கிறேன். அதனால், இதற்கு அனுமதி தரக்கூடாது என்று சொல்கிறேன். காலை 7 மணியிலிருந்து மாலை ஐந்து மணி வரைக்கும் தான் கல்குவாரி இயங்க வேண்டும். ஆனால், இந்த பகுதியில் கல்குவாரிகள் எல்லாம் இரவிலும், சட்ட விரோதமாக இயங்குகிறது. இரவுகளில் எல்லாம் நிறைய லாரிகள் இங்கு வந்து சரக்கு ஏத்திக்கிட்டு போகுது வருது. இரவில் வெடி வைக்கிறார்கள். அது போன்று வெடி வைப்பதில் பார்த்தால், மதியம் 1.00 மணி, 2:00 மணி வரைக்கும் தான் வெடி வைக்க வேண்டும். இங்கே நேரம் காலம் இல்லை. எப்பொழுது எல்லாம் நினைக்கிறார்களோ அப்பொழுதெல்லாம் வெடி வைக்கிறார்கள். அது மட்டும் இல்லாமல் 32 மில்லி மீட்டர் அதாவது மூணு சென்டிமீட்டர் அளவிற்கு மட்டும்தான் வெடி வைப்பதற்கு குழி தோண்ட வேண்டும் அப்படி என்ற விதியை எங்கேயுமே இங்கு பின்பற்றவில்லை. ஏற்கனவே, இவர்களெல்லாம் கல்குவாரி நடத்திகொண்டு இருக்கிறவர்கள். இப்பொழுது அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிற கல்குவாரியில் இந்த விதி எல்லாம் பின்பற்றவில்லை. 1886 வெடி மருந்து சட்டப்படி மதியம் ஒன்றில் இருந்து இரண்டு மணி வரைக்கும் தான் வெடி வைக்க வேண்டும் என்று தான் விதி இருக்கிறது. ஆனால், இந்த விதிகள்

பின்பற்றவில்லை என்பதை சொல்லிக்கிறேன். நாணல் வெடி தான் வைக்க வேண்டும் நாணல் வெடி வைக்க வேண்டும் என்பது தான் பல ஆண்டுகளாக திரும்பத் திரும்ப வலியுறுத்தி சொல்லிக்கிட்டு வருகிறோம். நாணல் வெடிகளை பயன்படுத்துவதே இல்லை. நாணல் வெடிகளை பயன்படுத்த வேண்டும். குழிக்கு மேல் மணல் மூட்டைகளை அடுக்க வேண்டும். தார்ப்பாயும், லாரி டயர், டிராக்டர் டயர் போட்டு Muffle முறையில் தான் வெடி வைக்க வேண்டும் என்பது தான் விதி. இந்த விதியை அவர்கள் பின்பற்றுவதே கிடையாது. இதை யாரும் கண்காணிப்பது இல்லை. கண்காணிக்க குழு அமைத்து கண்காணிக்க வேண்டும் என ஒவ்வொரு முறையும் சொல்கின்றோம். தொடர்ச்சியாக மாவட்ட ஆட்சியரிடமும் இதைப்பற்றி சொல்லிக்கொண்டே இருக்கிறோம். ஆனால், இதை செய்வதே இல்லை. இதை கண்காணிக்க வேண்டும். ஏற்கனவே, இதை முறைப்படி செய்யாமல் இருக்கிறவர்கள் அனுமதி கேட்டு இருக்கிறார்கள் என்பதை சுட்டிக் காட்டுகிறேன். அதனால் தான் திரும்பத் திரும்ப சொல்கிறேன். வெடி வைக்கும் குழி 32 மில்லி மீட்டர் அகலம் தான் இருக்க வேண்டும். 1.5 மீட்டர் தான் ஆழம் இருக்க வேண்டும். ஒரு குழிக்கும் மற்றொரு குழிக்கும் 1.2 மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும். ஜிக்ஜாக் முறையில் தான் குழி அமைக்கப்பட வேண்டும். ஒரு வெடி வைக்கும் குழிக்கும் இன்னொரு வெடி வைக்கும் குழிக்கும் வெடிவைக்கும் இடைவெளி 28 நொடிகள் இருக்க வேண்டும். இதையெல்லாம் எதுவுமே பின்பற்றப்படவில்லை. இதை வந்து பலமுறை புகார் சொல்லி இருக்கிறோம். ஆனால், இதை எங்கேயுமே பின்பற்றப்படவில்லை என்பதை நான் தெளிவாக சொல்லிக் கொள்கிறேன். இவர்கள் ஏற்கனவே செய்து கொண்டிருக்கின்ற குவாரிகளில் நாணல் வெடிகளை எவ்வளவு வாங்கி இருக்கிறார்கள். எங்கிருந்து வாங்கி இருக்கிறார்கள். யாருக்கு கொடுத்தார்கள் என்பதை ஆய்வு செய்தாலே இந்த உண்மை வெளிப்பட்டு விடும். சட்ட விரோதமான ஜெலட்டின் வெடிகளை பயன்படுத்துகிறார்கள். அதற்கு இந்த வெடி மருந்து சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புகார் கொடுத்து இருக்கிறோம். இதுவரைக்கும் எதுவும் செய்யவில்லை. திரும்பத் திரும்ப தவறு இழைக்கும் நபர்கள் அனுமதி கேட்டு வருகிறார்கள் என்பதை இங்கு பதிவு செய்து கொள்கிறேன். எந்த கல்குவாரியும் வெடிவைக்கும் முறையை பின்பற்றுவதில்லை. பல ஆண்டுகளாக இதை சொல்லிக் கொண்டிருக்கிறோம். வெடி வைக்கும் போது அதிர்வை கவனிக்க நிலநடுக்க கருவி வைத்து பரிசோதிக்கப்படும் என்று அறிக்கையில் சொல்லி இருக்கிறார்கள். ஆனால், நடைமுறையில் அப்படி செய்வதே இல்லை. அப்படி செய்யாததால் ஏற்கனவே நிறைய பாதிப்புகள் வந்திருக்கிறது. இந்த கல்குவாரி இயங்கும் போது வீடுகள் எல்லாம் இடிந்து இருக்கிறது. இங்கேயே கருத்து கேட்பு கூட்டத்தில் பல பேர் தகவல்

சொன்னார்கள். வீடுகளில் அதிர்வுகள் ஏற்படுகிறது, வீடுகளில் விரிசல்கள் ஏற்படுகிறது என்பதை இந்த ஊர் மக்கள் சொல்லி இருக்கிறார்கள். அதை நான் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். அதனால் இவர்கள் வெடி வைப்பதில் மிகப்பெரிய தவறு செய்கிறார்கள். எனவே, தீவிரமாக ஆய்வு செய்து இதை வந்து வெடி வைக்கும் முறையை கண்காணித்து முறைப்படுத்த வேண்டும். அப்படி முறைப்படுத்தும் வரை இந்த கல்குவாரி தவறான முறையில் தான் இயங்குகிறது என்பதை சுட்டிக் காட்டுகிறேன். ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கிறது. இது மாதிரியான ஆய்வுகளை செய்வதனால் சென்னை உயர்நீதிமன்றம் அமைத்த ஆய்வுக்குழு ஒன்று திருப்பூர் மாவட்டம், முரட்டு பாளையம் கிராமத்தில் உள்ள அனைத்து கல்குவாரிகளையும் ஆய்வு செய்து, எல்லாமே சட்ட விரோதமாக இயங்குகிறது என்பதை கண்டுபிடித்து, எல்லாத்துக்கும் சீல் வைத்தார்கள் என்பதை கவனத்திற்கு கொண்டு வருகிறேன். நீங்கள் ஆய்வு செய்தீர்கள் என்றால் இங்கேயே அதே தான் நடக்கும், செய்வதே இல்லை. திரும்பத் திரும்ப அந்த குற்றச்சாட்டை வைத்துக் கொண்டு இருக்கிறோம். செய்வதே இல்லை. நீங்கள் யாரும் கல்குவாரி இயங்க தொடங்கும் போது அமைக்கப்பட வேண்டிய கம்பி வேலி என்பது எல்லாம் சட்டத்தில் தான் இருக்கிறது. ஆனால், நடைமுறையில் இல்லை. இங்கே உள்ள எல்லா கல்குவாரிக்கும் இப்பொழுது வேண்டுமென்றாலும் சென்று பார்க்கலாம். எந்த கல்குவாரிக்கும் கம்பி வேலி அமைக்கப்படவே இல்லை. அமைக்கப்படாமல் தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த கல்குவாரிக்கு விண்ணப்பம் அளித்தவர்கள் ஏற்கனவே கல்குவாரி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த குவாரியிலும் எந்த கம்பி வேலிகளும் அமைக்கப்படவில்லை என்று நான் சுட்டி காட்டுகிறேன். அப்படி அமைக்கப்படாததன் காரணத்தால் விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் ஒரு மூடப்பட்ட கல் குவாரியில் ஐந்து பெண்களும், திருப்பூரில் பத்துக்கும் மேற்பட்டவர்களும், ஈரோட்டில் ஐந்திற்கும் மேற்பட்டவர்களும் இறந்து உள்ளார்கள் என்பதை இங்கே குறிப்பிட்டு சொல்லிக்கொள்கிறேன். அது மாதிரியான மனித இறப்பிற்கு இந்த கல்குவாரி சுற்றி வேலி இல்லாமல், விதிகளை பின்பற்றாமல் சட்ட விரோத செயல்கள் காரணமாக இருக்கிறது. அதற்கு இவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை திரும்ப சொல்லிக் கொள்கிறேன். இது மாதிரி சட்டவிரோதமாக தான் இந்த கல்குவாரிக்கும் அனுமதி கேட்டு இருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். சட்டத்தை வெறும் காகிதத்தில் எழுதி வைத்தால் மட்டும் நடைமுறைக்கு வந்து விடாது. அதிகாரிகள் தான் முறையாக கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை திரும்ப நான் சொல்கிறேன். மக்களுடைய வரிப்பணத்தில் சம்பளம் வாங்குகின்ற அதிகாரிகள் இதை செய்யவேண்டும். இங்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால்

தான் நான் திரும்பவும் சொல்கிறேன். பல ஆண்டுகளாக இந்த கல்குவாரி தொழில் செய்து கொண்டிருக்கிறார்கள். எந்த இடத்திலும் இதை செய்யவில்லை. திரும்ப இதை சுட்டிக் காட்டுகிறேன். பசுமை அரண் அமைப்பதில் ஏற்கனவே இந்த பகுதியில் ஆயிரக்கணக்கான மரங்கள் அமைப்பதாக அவர்களே தெரிவித்து இருக்கிறார்கள். ஏற்கனவே, அனுமதி வாங்கி இருக்கிற கல்குவாரிகள் இவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால், அவ்வாறு எங்குமே இல்லை. நீங்கள் சென்று பாருங்கள். நீங்கள் இதை ஆய்வு செய்ய வேண்டும். பசுமை அரண், கம்பி வேலி இதெல்லாம் கல்குவாரியோட இறுதி நிலை மூடல் திட்டம். இதெல்லாம் வந்து காகிதத்தில் தான் இருக்கிறது. நடைமுறையில் இல்லை. இதை முழுமையாக செயல்படுத்த வேண்டும். செயல்படுத்தி விட்டு புதிய குவாரிக்கு அனுமதி கேட்பவருக்கே அனுமதி கொடுக்க வேண்டும். அதுவரைக்கும் அனுமதி கேட்பவருக்கு கூட அனுமதி கொடுக்கக் கூடாது என்பதை நான் வலியுறுத்தி சொல்கிறேன். கல்குவாரி தொழிலாளர்களுக்கு நலன் செய்வதாக இவர்கள் அறிக்கையில் சொல்லி இருக்கிறார்கள். ஆனால், இயங்கிக் கொண்டிருக்கின்ற எந்த கல்குவாரிக்கும் ஏற்கனவே இயங்கிய எந்த கல்குவாரிக்கும் பணி புரியும் எந்த தொழிலாளர்களுக்கும் ESI, PF, காப்பீடு எந்த உரிமையும் இல்லை. இங்கே நிறைய பெயர் பேசினார்கள் எங்களுக்கு தொழில் இல்லை, வாய்ப்பில்லை, வசதி இல்லை அதனால் அனுமதி கொடுங்க என்று. ஆனால், அவர்கள் ஏற்கனவே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ESI இருக்கின்றதா, PF இருக்கின்றதா, காப்பீடு இருக்கின்றதா என்று கேட்டுப் பாருங்கள். எதுவுமே செய்து கொடுக்கவில்லை. எல்லாம் காகிதத்தில் சர்க்கரை என்று எழுதி வைத்தால் இனிக்காது என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். இதையெல்லாம் அரசு போகின்ற போக்கில் அனுமதி கொடுத்துவிட்டு நீங்கள் எவ்வளவு வேண்டும் என்றாலும் கொள்ளை அடித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு போவது போல இருக்கிறது. விதியை முறையாக பின்பற்ற வேண்டும். விதிகளை பின்பற்றுவதற்கும் அதை கடைபிடிப்பதற்கும் தான் விதிகள் இருக்கிறது. அதை கடைபிடிக்கப்படுகிறதா, பின்பற்றப்படுகிறதா என்று பார்ப்பதற்கு தான் அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் இதற்கான வட்ட கண்காணிப்பு குழு, மாவட்ட கண்காணிப்பு குழு எல்லாமே இருக்கிறது, எல்லாம் செய்ததே இல்லை. இந்த கண்காணிப்பு குழு எதற்கு இருக்கிறது என்றே தெரியவில்லை. இப்படி ஒழுங்காக கண்காணிக்காமல் இருப்பதனால் தான் நம் மாவட்டத்தில் ஏறத்தாழ 100 கோடி ரூபாய்க்கு மேல் சொத்துக்களை கொள்ளை அடித்து இதே மாதிரி கல்குவாரி திருமயம் வட்டத்தில் வைத்திருக்கிறார்கள். கொள்ளையடித்து வைத்திருக்கிறார்கள் என்று அரசிற்கு அரசினுடைய சொத்து களவு போகிறது என்பதை சுட்டிக்காட்டியதற்காக கல்குவாரி உரிமையாளர்களால்

எங்களுடைய தோழர் கொலை செய்யப்பட்டுள்ளார், இன்றைக்கு வரைக்கும் அந்த கொலையாளிகள் சிறையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒரு நல்ல மனிதருடைய உயிர் இழக்கப்பட்டு இருக்கிறது. அரசுக்கு நூறு கோடி ரூபாய்க்கு மேல் இழந்த சொத்து மீட்கப்பட்டது. அதை சுட்டி காட்டியதற்காக கொலை செய்யப்பட்டார். இது மாதிரியான நிலை எல்லாம் வரக்கூடாது. அங்கும் வட்ட கண்காணிப்பு குழு, மாவட்ட கண்காணிப்பு குழு எல்லாம் இருக்கிறது. ஏன் இதெல்லாம் கண்காணிக்கவில்லை. அதை நான் தெளிவாக திரும்ப சொல்கிறேன். ஆங்கில பத்திரிகையில் கல்குவாரி கருத்து கேட்பு கூட்டம் நடத்த தமிழ்நாடு முழுக்க விளம்பரம் செய்வதற்கு 2 லட்சம் ரூபாய் அரசு செய்ய செலவு செய்கிறது. ஆனால், வருங்காலத்தில் கருத்து கேட்பு கூட்டம் செய்தியை 2000 செலவு செய்தாலே, 10 கிலோமீட்டர் தூரத்திற்கு சுவரொட்டி அடித்து ஒட்டி விடலாம். நீங்கள் இரண்டு லட்ச ரூபாய் செலவு செய்து தமிழ்நாடு முழுவதும் விளம்பரம் செய்து ஆங்கில பத்திரிகையை எவ்வளவு பேர் படிக்கிறார்கள் என்பது தெரியவில்லை. இந்த ஊரில் கருத்து கேட்பு கூட்டம் நடக்கிறது. இந்த ஊரில் பாதிக்கப்பட்டு, இந்த பாதிப்பினால் துன்பத்தையும், துயரத்தையும் அனுபவிப்பவர்களுக்கு இங்கு கருத்து கேட்பு கூட்டம் விஷயம் நடப்பதே தெரியாது. இந்த பகுதியில் இருக்கிறவங்களுக்கு தெரியாது. வெறும் 2000 ரூபாய் செலவு செய்து இந்த பகுதியில் இருக்கிறவங்களுக்கு கருத்தை கேட்பதற்கு எளிமையான வழி இருப்பதற்கு இரண்டு லட்சம் செலவு செய்து ஆங்கில பத்திரிக்கையில் விளம்பரம் கொடுக்கிறீர்கள். அதனால் இதை நான் அடுத்த கருத்து கேட்பு கூட்டத்தில் இதை கவனத்தில் கொண்டு அரசு தங்களுடைய விதிமுறைகளில் இதை இணைத்து கூடுதலாக 2000 ரூபாய் செலவு செய்து, 2 லட்சம் செலவு செய்து விளம்பரம் கொடுங்கள் வேண்டாம் என சொல்லவில்லை. 2000 ரூபாய் கூட செலவு செய்து சுவரொட்டி அடித்து ஒட்டுங்கள். விளம்பரம் செய்யுங்கள் உள்ளூர் மக்களுக்கு இந்த செய்தியை தெரிய வையுங்கள் என்று நான் சொல்லிக்கொள்கிறேன். தொடர்ச்சியாக எல்லா இடத்திலும் சமூக பொருளாதார சூழலில் கல்வி மற்றும் வேலை வாய்ப்பு கணக்கில் எடுக்கிறார்கள். ஆனால், 10 கிலோமீட்டர் சுற்றி உள்ள கிராமத்தில் மக்களுக்கு பாதிப்புள்ள நோய் பற்றிய முழுமையான விபரம் எதுவுமே இல்லை. இந்த குவாரிகள் ஐந்து வருடம் இயங்குவதால் இந்த பகுதியில் பாதிக்கப்பட்ட மக்கள் என்ன நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், இந்த கல்குவாரி வருவதற்கு முன்னாடி எந்த நோயினால் பாதிக்கப்பட்டார்கள், ஐந்து வருடம் இயங்கிய பிறகு எந்த மாதிரியான நோய்கள் வந்திருக்கிறது என்பதை ஆய்வு செய்து எடுத்தால் தான் இது நமக்கு தெரிய வரும். அப்பொழுது இதை இவர்கள் செய்ய வேண்டும். அவர்களுடைய அறிக்கையில் இந்த விதிகளை நீங்கள் இணைக்க வேண்டும்.

வருங்காலத்தில் இந்த சமூக பொருளாதார அறிக்கையில் இந்த நோய் குறித்த அறிக்கைகளை மக்களுக்கு என்னென்ன நோயெல்லாம் இருக்கிறது, இல்லை என்கின்ற அறிக்கை எடுத்து, இதில் இணைக்க வேண்டும் என்பதை கேட்டுக்கொள்கிறேன். இந்த கல்குவாரி சுற்றியுள்ள கிராமங்கள் பற்றிய முழுமையான விவரங்கள் எதுவுமே இதில் குறிப்பிடவில்லை. 500 மீட்டர் சுற்றளவிற்கு உள்ள கிராம வரைபடம் எதுவுமே கிடைக்கவில்லை. இந்த இணையத்தில் ஏற்றப்பட்டுள்ள ஆவணங்களில் அது இல்லை. எனவே, இந்த கிராம வரைபடத்தை இணைத்தால் தான் அதனை முழுமையாக எல்லோரும் சரி பார்க்க முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். கல்குவாரி அமைகின்ற பகுதியை ஒட்டியே மிகப்பெரிய நீர் நிலை குளங்கள் இருக்கிறது என்று சொல்லி இருக்கிறேன். அது ஐந்தரை ஏக்கர் பரப்பளவில் மிகவும் ஆழத்தில் வெட்டும் பொழுது இந்த குளத்தில் உள்ள நீர் கீழே உள்ள கால்வாயின் வழியாக நீர் எல்லாம் குவாரி பகுதிக்கு வந்துவிடும். கால்வாயை எல்லாம் நிறைய மறித்து உடைத்துவிட்டார்கள். அதனால், அந்த கால்வாய்களில் உள்ள தண்ணீர் எல்லாம் இந்த குவாரிக்கு தான் வரும். அதனால் நீர் கிடைக்காமல் இந்த மக்களுக்கு சிக்கல் ஏற்படும். தண்ணீர் தேங்கி நிற்கின்ற சிக்கல் ஏற்படும். அதனால், இந்த மக்களுக்கு தொடர்ச்சியாக இழப்பு ஏற்படும். நீர் இல்லாமல் இந்த பகுதியில் விவசாயிகள் மற்றும் எல்லோருக்கும் சிக்கல் வரும். அதனால், இதை நான் குறிப்பிட்டு சொல்லிக்கொள்கிறேன் நிலத்தடி நீர்மட்டம் 55-ல் இருந்து 58 மீட்டர் என்று சொல்லி இருக்கிறார்கள். இங்கு வந்து 42 மீட்டர் ஆழத்துல கல்குவாரி வந்து பணி செய்கிறேன் என்று சொல்கிறார்கள். 42 மீட்டர் இவர்கள் செய்தார்கள் என்றால், இங்கே கிணத்துல இங்க இருக்கிற போர்வெல்ல தண்ணி இருக்காது. 100 அடி ஆழத்தில் இருக்கிற போர்வெல், 150 அடி ஆழத்தில் இருக்க ஆழ்துளை கிணற்றில் கூட தண்ணீர் இருக்காது. எல்லாமே கல்குவாரிக்கு போய்விடும். அதனால், இங்கு சிக்கல் வரும். நாங்கள் கல்குவாரி அமைப்பதற்கு எதிரானவர்கள் அல்ல. தெளிவாக சொல்லுகிறேன் கல்குவாரி அமைப்பதற்கு எதிரானவர்கள் அல்ல. இவ்வளவு விதி மீறல்களை விதிகள் சரியாக இருந்தும், எந்த கண்காணிப்பும் இல்லாமல் விதிமீறல்களை செய்கிறார்கள் என்றால் கண்காணிப்பு இல்லாமல் வைத்திருக்கிறார்கள். இந்த நாடும், மக்களும், எதிர்கால சமூகமும் நன்றாக இருக்க வேண்டும் என்கின்ற உணர்வு எல்லோருக்கும் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் தான், நமது பக்கத்தில் இருக்கக்கூடிய கேரளா மாநிலத்தைப் பார்த்து நமக்கு அறிவு வர வேண்டும், சொரணை வர வேண்டும், திருந்த வேண்டும். அங்கு ஒருத்தன் ஒரு சதுர அடி கல்ல கூட வெட்ட முடியவில்லை. தமிழ்நாட்டில் இருந்து லாரி லாரியாக வாங்கி சேமிக்கிறார்கள். இங்கே நம் சட்டத்திற்கு புறம்பாக விதிகளுக்கு மாறாக இங்கே எல்லா திருட்டுத்தனங்களையும்

செய்து இங்கு இருந்து நமக்கு கனிம வளங்களை கேரளாவுக்கும், ஆந்திராவிற்கும், கர்நாடகவிற்கும் நமக்கு தண்ணீர் தராத கர்நாடகாவிற்கு அணை கட்டுவதற்கு இங்கே இருந்து மணலையும் கல்லையும் ஏற்றி அனுப்பி வைக்கிறோம். இங்கே கேரளாவிற்கு இங்கே இருந்து போய்க்கொண்டிருக்கிறது. கேரளாவில் இருந்து கழிவுகளை அதே லாரியில் கொண்டு வந்து தமிழ்நாட்டில் கொட்டுகிறார்கள். திரும்பத் திரும்ப இதே தவறுகளை நாம் எந்தவித விதிகளையும் பின்பற்றுகிறார்களா என்பதை கவனிக்காமல், கண்காணிக்காமல் இருப்பது. மிகவும் தவறான விஷயம். நெல்லை மாவட்டத்தில் ஆய்வு செய்யப்பட்ட 54 குவாரிகளில் முறைகேடு நடந்துள்ளது என்பதை ஒரு குழு, உயர் நீதிமன்றம் அமைத்த குழு தெரிவித்து இருக்கிறது. இது மாதிரி முறைகேடு இருப்பதை புதுக்கோட்டை மாவட்டத்தில் பல நூறு கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இதுவரைக்கும் எந்த கல்குவாரியிலும் அபராதம் வசூலிக்கப்படவில்லை. எல்லாம் ஏன் வசூலிக்கப்படவில்லை. அதற்கு சரியான நடவடிக்கை எடுத்து உடனடியாக வசூலிப்பதற்கு RR Act படி வசூலித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்கிறேன். தொடர்ச்சியாக கோடிக்கணக்கான ரூபாய் அபராதம் விதிக்கிற அளவிற்கு தவறிழைப்பவர்களுக்கு தான் இங்கே திரும்பத் திரும்ப குவாரிக்கு அனுமதி கேட்டுகிட்டு இருக்கிறார்கள். அப்பொழுது தவறிழைக்கிறவர்களுக்கு மீண்டும் மீண்டும் அனுமதி கொடுக்கிறது. எந்த வகையில் சரியாக இருக்கும் என்பதை நான் சுட்டிக் காட்டுகிறேன். அடுத்து விருதுநகர் மாவட்டத்தில் இதேபோன்று சட்ட விரோத 5 குவாரிகள் அனுமதியை கடந்தாண்டு மாவட்ட ஆட்சி தலைவர் ரத்து செய்து இருக்கிறார். இதேபோன்று நமது மாவட்டத்தில் போன வருடம் திருமயம் வட்டத்தில் இரண்டு கல்குவாரிகள் சீல் வைக்கப்பட்டது. இதில் நாங்கள் எம்சாண்ட் எதிர்ப்பதனால் ஆற்று மணலையும் எடுக்கக் கூடாது என்று சொல்கிறார்கள். எப்படி கட்டுமான தொழில் வளரும் என்று சொல்லி கேட்கிறார்கள். கடந்த ஆட்சியில் ஒரு நாளைக்கு ஒரு மாதத்திற்கு 5 லட்சம் டன் இயற்கை ஆற்று மணல் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி பண்ணுவதற்கு அரசு ஆணை வழங்கப்பட்டது. ஆனால், இன்றைக்கு வரைக்கும் வெளிநாட்டில் இருந்து இயற்கை ஆற்று மணல் இறக்குமதி செய்யப்படவே இல்லை. வெளிநாட்டில் இருந்து இயற்கை ஆற்று மணலை வெறும் ஆயிரம் ரூபாய்க்கு ஒரு யூனிட் தருவதற்கு தயாராக இருக்கிறார்கள். மிக குறைந்த விலையில் கட்டுமான தொழில் மிக சிறந்த இயற்கை ஆற்று மணலைக் கொண்டு நீங்கள் கட்ட முடியும் என்கின்ற பொழுது, எதற்காக இங்கே உள்ள கனிம வளங்களை எதிர்காலத்தில் மலை என்றால் இந்த மக்களுக்கு தெரியாத அளவு, எதிர்கால சந்ததிகளுக்கு மலை என்றால் படம் வரைந்து காட்டக்கூடிய அளவிற்கு இங்கு இருக்கக்கூடிய அனைத்து மலைகளையும் பாறைகளை

தகர்த்து எடுக்கக்கூடிய தேவையும் கட்டாயமும் அவசியமும் ஏன் ஏற்படுகிறது என கேள்வி எழுப்பினார். இயற்கை ஆற்று மணல் வெளிநாட்டில் அவர்களுடைய சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. மிகப்பெரிய வெள்ளம் ஆற்றில் வருகிறது. அதனால், அந்த மணலை அள்ளினால் தான் அந்த ஊருக்குள்ள வெள்ளம் வராது தடுக்க வேண்டும் என்பதற்காக அந்த மணலை ஆற்று மணலை அள்ளி நமக்கு தர தயாராக இருக்கிறார்கள். அந்த வெளிநாடுகளுடைய இயற்கை வளமும் சுற்றுச்சூழலும் பாதுகாக்கும் வகையில் அந்த ஆற்று மணலை, எடுக்கிறார்கள். நம்ம ஊரில் சுற்றுச்சூழலை கெடுக்கும் வகையில் இதை செய்யக்கூடாது. அவர்களையும் பாதுகாக்கவும், நமது சுற்றுச்சூழலை பாதுகாக்கும் படியாகவும் அந்த இயற்கை ஆற்று மணலை இங்கே இறக்குமதி செய்து பயன்படுத்திக்க முடியும். எனவே, அதைத்தான் இந்த அரசு மீண்டும் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி கேட்டுகொள்கிறேன். இதில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமும், நீங்களும் என்ற தொழில் முனைவோர் தொழில் முனைவோர்களுக்கான கையேட்டில், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் வெளியிட்டுள்ள நூலில் குறிப்பிட்டுள்ளபடி தொழில் முனைவோர் தவறான தகவல்களை தெரிந்தோ அல்லது மறைத்து தனது அறிக்கையில் தெரிவித்து இருந்தால் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படாது. அப்படி அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும் அந்த தொழில் முனைவோர் தனது சொந்தச் செலவில் அந்தத் திட்டத்தை அகற்றிக் கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் பலவற்றை மறைத்திருக்கிறார்கள், பலவற்றை இந்த அறிக்கையில் மறைத்து பொய்யான தகவலை தெரிவித்து இருக்கிறார்கள், திசை திருப்புதல் செய்திருக்கிறார்கள். எனவே, இந்த அறிக்கை அடிப்படையிலேயே பரிசீலனைக்க தகுதியற்றது என்று வலியுறுத்தி உறுதியாக சொல்லிக் கொள்கிறேன். எனவே, இந்த அறிக்கை நிராகரிக்கப்பட வேண்டிய அறிக்கை. எனவே, பல்வேறு தவறான புள்ளி விபரங்கள் கொடுத்தும், பலவற்றை மறைத்தும் உள்ள இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்கக் கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன் நன்றி எனக் கூறி தனது எதிர்ப்பு கருத்தினை பதிவு செய்தார்.

**11. திரு. சபரி, மேலமுத்துடையான்பட்டி**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய கருத்து கேட்பு கூட்டம் இப்பொழுது நடக்கிறது. நீங்கள் இப்பொழுது அனுமதி கொடுப்பதற்காக பேசிக் கொண்டிருக்கிறீர்கள். ஏற்கனவே அனுமதி கொடுத்த கல்குவாரியை எல்லாம் நீங்கள் சென்று ஒரு ஆய்வு செய்ய வேண்டும். என் பெயர் சபரி, மேலமுத்துடையான்பட்டியில் இருந்து பேசுகிறேன். இங்கு நிறைய பேர் சொல்கிறார்கள், மேலூர் பஞ்சாயத்து

இதனால் வளர்ச்சி அடைகிறது என்று சொல்கிறார்கள். வளர்ச்சி அடைவது என்னமோ மேலூர் பஞ்சாயத்துதான். ஆனால், பாதிக்கப்படுவது சுத்தி இருக்க எல்லா பஞ்சாயத்தும் பாதிக்கப்பட்டுக் கொண்டு தான் இருக்கிறது. நீங்கள் பார்த்தீர்கள் என்றால் மேலமுத்துடையான்பட்டி வரையும் மாசு எவ்வளவு தூரம் இருக்கிறது என நீங்கள் ஆய்வு செய்து பாருங்கள். நீங்கள் காரில் சென்றுவிட்டு வருவதால் உங்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. இருசக்கர வாகனம் எடுத்துக்கொண்டு சென்று பாருங்கள். அந்த பக்கம் உங்களால் போக முடியாது. ஏன்னென்றால் இங்கு இயங்கிகொண்டு இருக்கிற எல்லா குவாரியும் பார்த்தீர்கள் என்றால் உங்கள் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பின்பற்றி நடத்துகிறார்களா என்று எங்களுக்கு தெரியவில்லை. அந்த பக்கம் அவ்வளவு மாசு இருக்கிறது. எப்படியும் நம்ம மண்ணுக்குள்ள போக போறேன்னு முடிவாகி போச்சு. ஏனென்றால், ஏற்கனவே தோண்டி வைத்திருக்கின்ற கல்குவாரி எல்லாத்துக்கும் ஒரு சின்ன நிலநடுக்கம் வந்தாலும் உள்ள போயிடுவோம். என்ன நிலநடுக்கம் வரும் என்று சொல்வதாக பார்க்காதீர்கள். வரலாற்றுக்கு மாறாக இன்று நிறைய நடந்துவிட்டது. என்ன சொல்ல வருகிறேன் என்றால் எப்படியும் உள்ள போகபோகிறோம் என்று தெரிஞ்சு போச்சு. இருக்கின்ற வரையும் மாசு இல்லாமல் இருந்துவிட்டு போகணும் அதை தான் நான் சொல்ல வருகிறேன். அதனால், சுற்றி நிறைய கிராமங்கள் இருக்கிறது. வளர்ச்சி அடைவது ஒரு பஞ்சாயத்து தான். ஆனால், சுற்றி உள்ள நிறைய கிராமங்கள் பாதிக்கப்படுகிறது. பக்கத்தில் எத்தனை மக்கள் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். நீங்கள் ஏற்கனவே, அனுமதி கொடுத்து தற்பொழுது இயங்கிக் கொண்டு இருக்கிற குவாரிகளையும் ஆய்வு செய்து உங்கள் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைக்கு கீழே அவர்கள் நடத்திட்டு இருக்கிறார்களா என்று பார்க்க வேண்டும் என்று தன் கோரிக்கையாக கேட்டுக்கொண்டு தனது கருத்தினை பதிவு செய்தார்.

**வருவாய் கோட்டாட்சியர், இலுப்பூர்:**

அதற்கு பின்பு வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் பொதுமக்கள் யாரேனும் கருத்து சொல்வதாக இருந்தால் தெரிவிக்கலாம் என்று கூறினார். பின்பு பொதுமக்கள் யாரும் கருத்து தெரிவிக்க முன்வராததால் கூட்டத்தினை முடித்து வைப்பதாக தெரிவித்தார்.

**நன்றியுரை:**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை எழுத்துவடிவில், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலோ அல்லது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் புதுக்கோட்டை அலுவலகத்திலோ சமர்பிக்கலாம்

என்று தெரிவித்துக் கொண்டார். தி/ள். ப. ஆறுமுகம் உடைக்கல் மற்றும் கிராவல் குவாரி பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்திய வருவாய் கோட்டாட்சியர், இலுப்பூர் அவர்களுக்கு நன்றி கூறினார். இதர வருவாய் துறை அதிகாரிகள், கல்குவாரி நிறுவன உரிமையாளர்கள், திட்ட பிரதிநிதிகள், பணியாளர்கள், சமூக ஆர்வலர்கள், காவல்துறை அதிகாரிகள், பத்திரிக்கை நிருபர்கள் மற்றும் கலந்துகொண்ட பொதுமக்கள் அனைவருக்கும் நன்றியினை மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தெரிவித்துக்கொண்டார்.

கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**இணைப்பு:**

1. கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களின் வருகை பதிவேடு (அ).
2. திட்ட பிரதிநிதிகளின் நிழற்பட விளக்க உரை (ஆ)
3. கருத்துக் கேட்புக் கூட்ட நடவடிக்கைகளைப் பதிவு செய்த வீடியோ குறுந்தகடுகள் (இ).
4. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு வரைவு விரிவான அறிக்கை மற்றும் தமிழ், ஆங்கிலத்தில் திட்ட சுருக்க உரைகள் (ஈ).

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**புதுக்கோட்டை.**

**வருவாய் கோட்டாட்சியர்,**
**இலுப்பூர்**